பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 18 செவ்வாய்க்கிழமை (04.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 280

# மக்களைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கும் தாக்குதல்கள் தொடருமாம்!

## வடக்கைக் கைப்பற்றும் நடவடிக்கை எதுவுமில்லை

கொழும்பு,செப்ரெம்பர் 4

பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து அப்பாவிப் பொதுமக்களை மீட்கும் - மனிதாபிமான நோக்கம் கொண்ட - தாக்குதல் நடவடிக்கைகளை அரசு தொடரும். அது அரசின் கடமையும் கூட. ஆனால் இதனை வடக்கை மீட்கும் நடவடிக்கை என்று விவரிக்கவோ - விமர்சிக்கவோ முடியாது.

- இவ்வாறு விளக்கத்துடன் கூடிய அறிவிப்பை விடுத்திருக்கின்றது இலங்கை அரசு.

அரசின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இந்த அறிவிப்பை விடுத்தார்.

பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து தெளிவுபடுத்துவதற்காக நேற்று கொழும்பில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் போதே இதனை அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கைக் கைப்பற்றும் நோக்கம் என்று எதுவும் அரசுக்குக் கிடையாது. இது விடயத்தில் வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம மலேசியாவில் வைத்துக் கூறியவையே அரசின் நிலைப்பாடாகும். அதில் மாற்றம் ஏதும் இல்லை.

சிலாவத்துறையில் இடம்பெற்றது பயங்கரவாதிகளின் பயங்கரவாதப் பிடியிலிருந்து அப்பாவி மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையே. அத்தகைய செயற்பாட்டுக்கு ஊடகவியலாளர்கள் என்ன பெயர் கொடுத்தாலும் - அடைமொழி கொடுத்தாலும் - எமக்கு ஒன்றுமில்லை. அதை நீங்கள் தாக்குதல் நடவடிக்கை என்று கூறலாம். அல்லது ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் இராணுவச் செயற்பாடு என்று அர்த்தப்படுத்தலாம். ஆனால் அரசைப் பொறுத்தவரை அது மக்களைப் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்கும் ஒரு மனிதாபிமான நடவடிக்கை மட்டுமே.

(08ஆம் பக்கம் பார்க்க)

## 11 பேரின் சடலங்களும் ஒரே குழியில் அடக்கம்

மன்னார்,செப்.4

சிலாவத்துறை, பசுந்தென்றல் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஆழ ஊடுருவும் படையினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட 11 பேரின் சடலங்களும் ஒரே குழியில் கடந்த ஞாயிறு நள்ளிரவு அடக்கம் செய்யப்பட்டன.

மன்னார் சேமக்காலையில் 'புல்டோசர்' கொண்டு தோண்டப்பட்ட பாரிய குழியில் சடலங்கள் பதினொன்றும் அடக்கம் செய்யப்பட்டன.

இந்தத் தாக்குதலில் கொலையுண்டு மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த ஒருவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டு தனியாகப் புதைக்கப்பட்டது.

## இரவு வேளையில் வீட்டில் இருந்து கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,செப்.4

அரியாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட ஒருவர், வெட்டுக் காயங்களுடன் சடலமாக நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்றுக்காலை மீட்கப்பட்டார்.

அரியாலை, இலந்தைக்குளம் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இதயராஜ் (வயது 27) என்பவரே கொல்லப்பட்டவராவார். இவர் ஓட்டோ உரிமையாளர் ஆவார்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவம் தொடர்பாக நேற்று விசாரணைகளை நடத்தினார். இறந்தவரின் சிறியதந்தையான காசிப்பிள்ளை சோதிராசா சாட்சியம் அளித்தார்.

கடந்த முதலாம் திகதி இரவு வீட்டுக்கு வாகனத்தில் வந்தவர்கள் இவரைக் கடத்திச் சென்றனர். பின்னர் பல இடங்களிலும் அவரைத் தேடினோம். கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்றுக்காலை நாயன்மார் குளத்துக்குச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கிறது!

### நேற்று மட்டும் ஒன்பது பேர்

யாழ்ப்பாணம்,செப்.4

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைவோர் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. நேற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட மொத்தம் 9 பேர் சரணடைந்தனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் நால்வரும், வேறு இடங்களைச் சேர்ந்த ஐந்து ஆண்களும் நேற்றுச் சரணடைந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் சரணடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும், நேற்றுச் சரணடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் யாழ். பொலிஸ்

(08ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் படையின் பயணச் சேவை நேற்று ஆரம்பம்; இங்கிருந்து பயணிகளை அழைத்துச் செல்வது தாமதம்

நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தின் பொருட்டு விமானப் படையினர் நடத்தும் பயணிகள் சேவை நேற்று ஆரம்பமானது.

விமானப் படையினரின் விமானத்தில் ஒரு தொகுதி பயணிகள் நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த விமானங்களில் பயணிகளை கொழும்புக்கு அழைத்துச்செல்லும் பணி எதிர்பார்க்கப்பட்டது போன்று ஆரம்பிக்கப்படவில்லை.

பயணத்துக்கான ஏற்பாடுகள், பயணச் சீட்டு வழங்கல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை என்றும் -

ஓரிரு தினங்களில் அந்த ஏற்பாடுகள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் - நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார். (அ-1)

## 3 வார காலத்தில் 34 பேர் காணாமல் போயுள்ளனர்

### செஞ்சிலுவை சர்வதேசக் குழு அறிவிப்பு

கொழும்பு,செப்.4

கடந்த 3 வார காலப்பகுதியில் மாத்திரம் இலங்கையில் ஆகக் குறைந்தது 34 பேர் காணாமல்போயுள்ளனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தில் இலங்கையில் இடம்பெறுகின்ற மனித உரிமைகள் தொடர்பில் ஆராயவுள்ள நிலையில் இந்தத் தகவலை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வெளியிட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசில் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவொன்று சிறுவர்களைப் படையில் சேர்ப்பது குறித்தும், சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமை அமைப்புகள் அரசை விமர்சிப்பது தொடர்பாகவும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது. (சி)

## முசலி உதவி அரச அதிபர் பிரிவில் முள்ளி தவிர்ந்த ஏனைய கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்வு

மன்னார்,செப்.4

சிலாவத்துறை நோக்கிப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக, முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், முள்ளிக் கிராமம் தவிர்ந்த ஏனைய கிராமங்கள் அனைத்தையும் சேர்ந்த மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

நானாட்டான் உதவி அரச அதிபர் என். திருஞானசம்பந்தன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த 2ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரம் பேர் நானாட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நானாட்டான் மகாவித்தியாலயம், டொன் பொஸ்கோ கட்டடம் உட்பட உறவினர் வீடுகளில் அவர்கள் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு இப்போது மூன்று நேரமும் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது. - என்றும் உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை மன்னாரில் உள்ள பல தொண்டு அமைப்புக்கள் வழங்கி வருகின்றன.

அதேவேளை-

வன்னி மாவட்டப் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாத் பதியுதீன் நானாட்டானுக்கு வருகை தந்து இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைகளை அவதானித்தார்.

முசலியில் வாழ்ந்துவந்த 35 முஸ்லிம் குடும்பங்களும் இடம்பெயர்ந்து நானாட்டானுக்கு வந்துள்ளன.

(அ-1)

## தள்ளாடி ஷெல்லில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு,செப்.4

மன்னார், தள்ளாடிப் பகுதியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஷெல் தாக்குதலில் வண்ணாங்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவர் 2 பிள்ளைகளின் தந்தையான நேசன் (வயது - 32) எனவும், படுகாயமடைந்தவர் 4 பிள்ளைகளின் தந்தையான யோகநாதன் தீபன் (வயது-38) எனவும் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். (சி)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பட்டதாரிகள் உள்ளகப் பயிற்சிக்கு திறமை அடிப்படையில்

கொழும்பு,செப்.4

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடப் பட்டதாரிகளுக்கான உள்ளகப் பயிற்சிக்குரிய நியமனங்களை திறமை அடிப்படைப் பட்டியல் ஒழுங்கின் பிரகாரம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் அமைச்சு அதிகாரிகள் மற்றும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள், மருத்துவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்ற மருத்துவப் பட்டதாரிகளை வடக்கு - கிழக்கில் பணியாற்ற நியமிக்க சுகாதார அமைச்சர் எடுத்த முடிவுக்கு மருத்துவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

திறமை அடிப்படைப் பட்டியல் ஒழுங்கின் பிரகாரம் நியமனங்களை வழங்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இது விடயம் நீண்ட நேரமாக விரிவாக ஆராயப்பட்டது. திறமை அடிப்படைப் பட்டியல் ஒழுங்கில் நியமனங்களை வழங்குவதென இறுதியில் முடிவு செய்யப்பட்டது. (அ-1-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட 420 மீனவக் குடும்பங்களுக்கு சுமார் நான்கரை லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தந்துதவியமைக்கு யாழ்.மறை மாவட்ட மனித முன்னேற்றக் கழகத்திற்கும் (கரிதாஸ், கியூடெக்) அதன் இயக்குநர் வண.பிதா ஜெயக்குமார் அடிகளார் அவர்களுக்கும் இப்பொருள்களைப் பெற்றுக்கொள்ள ஒத்துழைப்பு வழங்கிய யாழ். அரச அதிபர் உயர்திரு. கே.கணேஸ் அவர்களுக்கும் நெடுந்தீவு உ.அ.அதிபர் திரு. எஸ்.வேணுகோபாலன் அவர்களுக்கும் நெடுந்தீவு பங்குந்தந்தை அருட்திரு. றோய் பேர்டினற் அவர்களுக்கும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சார்பாக எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்** (64495)

## துயர் பகிர்கின்றோம்


எமது திணைக்கள பருத்தித்துறைப் பிரதேச செயலக
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு.அ.நிர்மலன் அவர்களது அன்புத்தாய்


**திருமதி மகேஸ்வரி அரியரட்ணம்**

அவர்கள் 22.08.2007 புதன்கிழமை அன்று இறைபதமடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்திக் குடும்பம்.** (64490)

## கப்பல் சேவை





புகையிலை, சுருட்டு, வெங்காயம்
மற்றும் பனை உற்பத்திப்
பொருள்கள், கடலுணவுப்
பொருள்கள், கப்பல் மூலம்
திருகோணமலைக்கும் கொழும்புக்கும் அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

**E.R.TRANSPORT SERVICE**
**Vallipura Pariyariyar Lane (Odai Lane),**
**Pointpedro.**
**T.P. : 021 226 4210, 0777317998** (64498)

## தவறிவிட்டது

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த அம்பலவாணர் இராஜகோபால கிருஷ்ணன் என்பவருடைய தே.அ.அட்டை (610835139V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பாலாவோடை, உடுவில் தெற்கு என்னும் முக வரியில் ஒப்படைத்துதவவும். (64499)

## கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம்
மற்றும் பனை உற்பத்திப்
பொருள்கள் கப்பல் மூலம்
திருகோணமலைக்கு அனுப்ப
விரும்புபவர்கள் கீழ்க்காணும்
முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**G.திருவருள்**
**KOBIRAJA TRANSPORT**
தொ.பே. 0602213643, 0214591324
கந்தரோடை மேற்கு,(தம்பனை)
சுன்னாகம்.
தொ.பே. 0773638459 (64494)

## வெருகலில் ஆறு பேரைக் காணவில்லை

கொழும்பு,செப்.04

திருகோணமலை வெருகல் பகுதியிலுள்ள காடு ஒன்றுக்கு கடந்த வெள்ளியன்று விறகு வெட்டச் சென்ற 6 பேர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அவர்களது உறவினர்கள் வெருகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வெருகல் பொலிஸார் இது குறித்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(சி)

## அறிவித்தல்

### லொறி உரிமையாளர்களின் கவனத்திற்கு

வடபகுதி உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெண்காயம், பனம் உற்பத்திப் பொருள்கள் போன்றவைகளை வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கு கப்பல் மூலமாக ஏற்றிச் செல்வதற்கு லொறிகள் தேவையாக இருப்பதால் விரும்பிய லொறி உரிமையாளர்கள் உடனடியாக லொறி ஆவணங்களுடன் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளுமாறும் லொறிச் சங்கத்தில் பதிவில்லாத லொறிகளும் பதிவு செய்து கொள்ளலாம்.

**ஈ.ஆர்.டிரான்ஸ்போர்ட்**
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை (64496)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமியம்மா இலங்கைவினாயகம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இலட்சு மியம்மா இலங்கை வினாயகம் (29.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
பெ.இரத்தினசபாபதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

### ஆறுமுகம் நவரத்தினம்

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நவரத்தினம்(02.09.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வப்பூமலரின் அன்புக் கணவரும் நாகரத்தினம், நடேசமூர்த்தி, பாலகிருஷ்ணன், சற்குருபரன், பிறேமா, கமலா, நளினி, நாகேந்திரன், யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுப்பிரமணியம், சதாசிவம், தயாளன், ஜெயராஜன், கரிகரன், இரத்தினேஸ்வரி, வதனா, சதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.09.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு,
அச்சுவேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

### பொன்னு அழகரத்தினம் (சின்னண்ணை)



(கட்டட ஒப்பந்தக்காரர் )

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு அழகரத்தினம் நேற்று (03.09.2007) திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் லெனின் ராஜ், சத்தியராஜ் (சுவிஸ்), காலஞ்சென்ற தனராஜ் மற்றும் மீனலோஜினி, நித்தியலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவாஜினி, சசி, றஜீனா (பவுண்- சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் டெனிஸ்மேனன், அக்ஷனா, சர்மிலி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் செல்வரட்ணம், சிவப்பிரகாசம், விக்னேஸ்வரன், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமலிங்கத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால்,
இணுவில் கிழக்கு. (64492)

தகவல்:
பொ.விக்னேஸ்வரன்
(சகோதரன்).

### சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணன் நேற்று இறைபதமடைந்தார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் சுவர்ணா (சுவிஸ்), சுவைதா(ஜேர்மனி), சுகிர்தா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராஜசிங்கம்(சுவிஸ்), சிவநாதன் (ஜேர்மனி), சுப்பிரமணியம்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் நிலாஷா, நிரேஷ், மிதுஷன், மிதுசா, ஆகாஷ், சஞ்சய் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி (அ/53556)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2007

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் இக்ராட் (ICTAD) தரம் M9, M7 உம் அதற்கு மேற்பட்ட தரப் பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி தொ.இல. 1,2 இற்கான கேள்விகளிற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம். கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 05.09.2007 முதல் 19.09.2007 மதியம் 12 மணி வரை
2) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 20.09.2007 மு.ப. 10 மணிவரை
3) கேள்வி திறக்கப்படும் திகதி 20.09.2007 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4) கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5) கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுத் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினை பெறுதல் வேண்டும்.
6) விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும் இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிநிதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
7) கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர் வரி(Vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி(Vat) 15%சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இந்த நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
8) தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்கள் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 1 | யா/இளவாலை மெய்கண்டான் வித்தி. விஞ்ஞான அறை,மனைப்பொருளியல் அறைத் திருத்தம் | 535.00 | 250.00 | M9 |
| 2 | யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை வகுப்பறைத் திருத்தம் | 2,480.00 | 500.00 | M9 |
| 3 | யா/அளவெட்டி அருணாசலம் வித்தி. க.பொ.த.(சா/த) ஆய்வுகூட நிர்மாணம் | 21,500.00 | 750.00 | M7 |

(அ/53557)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டம் இடைநிறுத்தப்பட்டது ஏன்? அமைச்சிடம் ஜனாதிபதி செயலகம் விளக்கம் கேட்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.4

வழுக்கையாற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டதற்கான விளக்கத்தை ஜனாதிபதி செயலகம் விவசாய அமைச்சுச் செயலரிடம் கோரியுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டம் 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென 220 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த அபிவிருத்தித் திட்டத்தால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து 2006ஆம் ஆண்டில் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தை மீள நடைமுறைப் படுத்துமாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் எச்.எம்.சுஜீவ பி. ரிசர விவசாய அமைச்சின் செயலாளரிடம் திட்டம் இடைநிறுத்தப்பட்டதற்கான விளக்கத்தைக் கோரியுள்ளார்.

இதேவேளை -

ஜனாதிபதி செயலகம் நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சுக் கூடாகவும் இத்திட்டம் கைவிடப்பட்டமை தொடர்பாக மேலதிக விளக்கங்களை கோரியுள்ளது. (202-95)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் 'கற்றாக்' நோயால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்களில் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு விழிவெண்படலத்தில் பூப் படர்வு (கற்றாக்) நோய் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, மட்டுவில், கைதடி, நாவற்குழி, வரணி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட பரிசோதனை முகாம்களிலேயே கற்றாக் ஏற்பட்ட நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விரைவில் சத்திர சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# உற்பத்தியை சந்தைப்படுத்த முடியவில்லை; திராட்சைச் செய்கையாளர் பெருங்கவலை

வலி.வடக்கு,செப்.4

யாழ்.மாவட்டத்தில் திராட்சைச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். ஏ-9 வீதி மூடப்பட்டமையால் தமது திராட்சைப் பழங்களை சந்தைப்படுத்த முடியாததாலேயே இந்த நிலை ஏற்பட்டதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

திராட்சைச் செய்கையில் குடாநாட்டில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு அரசினால் எந்தவகையான உதவிகளும் வழங்கப்படுவதில்லை. இதேநேரம் ஏனைய தொழிலாளர்களுக்கு தொழில் இழப்புக்கான திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணமும் கூட வழங்கப்படுவதில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உரும்பிராய், ஊரெழு, அளவெட்டி, இளவாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் அதிகளவு திராட்சைச் செய்கையாளர் காணப்படுகின்றார்கள்.

திராட்சைப் பழங்களை உரிய முறையில் சந் தைப்படுத்தமுடியாமையால் உற்பத்தியாளர்கள் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் பல லட்சம் ரூபா நஷ்டம் அடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை விவசாய, கமத்தொழில் திணைக்களங்கள் பெற்றுத் தரவேண்டும் என திராட்சை செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேநேரம் பலர் தமது திராட்சை மரங்களை அழித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

# குடாநாட்டில் உயர்தரப் பரீட்சை சுமுகமாக நடைபெற்று முடிந்தது

## பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

குடாநாட்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை சுமுகமாக நடைபெற்று முடிந்துள்ளது. இதற்கு முழு ஒத்துழைப்பையும் பாதுகாப்பையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்புப் படையினர் வழங்கியுள்ளனர் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இம்முறை யாழ்ப்பாணத்திலும் மிகவும் வெற்றிகரமாக உயர்தரப் பரீட்சை நடந்து முடிந்தது. யாழ்ப்பாணத்தில் இம்முறை 73 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றதுடன், உத்வேகத்துடன் மாணவ, மாணவிகள் பரீட்சையில் கலந்துகொண்டனர். 9207 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதியதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. அத்துடன் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளின் கூற்றுப்படி இம்முறை பரீட்சையில் அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தோற்றியதாகவும் (85 வீதம்) தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இம்முறை பரீட்சையில் தோற்றிய அனைவருக்கும் தாம் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவேண்டுமென்று பாதுகாப்புப் படையினராகிய நாம் பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது. (202)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு சமையல் பாத்திரங்கள்

யாழ்ப்பாணம்,செப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது சமையல் பாத்திரங்களை இழந்த பாடசாலைகளுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தில் உலக உணவுத் திட்ட நிறுவனத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு சமைத்து வழங்குவதற்கெனக் கையளிக்கப்பட்ட சமையல் பாத்திரங்களை இழந்த பாடசாலைகளுக்கே புதிய பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் கோட்டக் கல்வி அலுவலகத்தில் படிவத்தைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அப் பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தி கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-207)



தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களுக்கான வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வலயக் கொடியினை ஏற்றி வைப்பதையும் படங்களில் காணலாம். (207)

## சட்டவிரோத மின்சாரம் பெற்றதாக இருவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.4

ஏழாலை, மயிலங்காட்டில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பகுதியில் திடீர் சோதனை நடத்திய பொலிஸார் இவர்களை கைதுசெய்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# மாநகர அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாத நிலை; நிதி நெருக்கடி காரணம் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்.மாநகர சபைக்குத் தற்போது பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது என மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கென அமைச்சுக்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பெறப்படும் வருமானங்கள் மூலமே அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும் தற்போது பெறப்படும் வருமான வரிகள் மிகவும் குறைந்த மட்டத்திலே கிடைக்கின்றன. இதற்கு தற்கால அசாதாரண சூழ்நிலையும் முக்கிய காரண மாகும்.

இதனால் ஏற்கனவே உத்தேசித்திருந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது - என்றார். (202-69)

## கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் யாழ்.வலயத்தில் நியமனம்

நல்லூர்,செப்.4

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் தற்காலிக கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளராக (ஆரம்பக்கல்வி) பூ.குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பதவிக்காக இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும்வரை இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த பூ.குகதாசன் மேற்குறித்த கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளராக பணியாற்றுவார் என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (202-111)

# வலயங்களுக்கிடையிலான நாடகப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முதலிடம்

நல்லூர்,செப்.4

யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கிடையில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் காவிய கதா நடன, நாடகப் போட்டி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டிகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ்.வலய கல்விப் பணிப்பாளருமான வீ.ரி.செல்வரத்தினம் தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

காவிய கதா நடன, நாடகப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு கல்லூரிகள் பங்குபற்றின.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி முதலாம் இடத்தையும், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும்-

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நான்காம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஐந்தாம் இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை ஆறாம் இடத்தையும், காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஏழாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

மாவட்ட மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ள தமிழ் விழாவின்போது இடம்பெறும் என வடமாகாண கலாசார உத்தியோகத்தர் வீ.குணபாலன் தெரிவித்தார்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் போட்டிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (202-111)

## திட்டமிடல் அலுவலர்களுக்கு தடைதாண்டல் பரீட்சை

நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை திட்டமிடற் சேவையின் IIஆம் வகுப்பு IIஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான முதல் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது பகுதித் தலைவர்களின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 31.08.2007ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-86)

# கடலில் வெள்ளநீர் சேர்வதைத் தடுக்க அராலிப் பாலத்தில் தற்காலிக அணை

வலி.தென்மேற்கு,செப்.4

மழைக் காலத்தில் வழுக்கையாற்றிலிருந்து வரும் வெள்ளநீர் அராலிப் பாலத்தினூடாக அராலிக் கடலில் வீணாகப் போய் கலக்கும் நிலை உள்ளது. இதனைத் தடுக்கும் நோக்கில் பத்து கண் உள்ள தடுப்பு அணையில் தற்காலிகமாக மண் சாக்குகள் போடப்படவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க.முதலியார், அராலி தெற்கு - வடக்குப் பிரிவு விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் யாழ்.அரச அதிபரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

எதிர்வரும் மாரி மழைகாலத்தில் அராலி-கல்லுண்டாய் பகுதியிலுள்ள பத்து கண் மதகு பாலத்தினூடாக வழுக்கையாற்றின் நன்னீர் ஓடிக் கடலில் போய் கலக்கின்றது. இந்த நன்னீர் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு தற்காலிகமாக இங்கு மண்மூடைகள் போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். இதுபற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற் கொள்வதாக யாழ். அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, சில வருடங்களுக்கு முன்னர் இந்த பத்து கண் மதகுக்கு சில தடுப்பு பலகைகள் போட்டிருந்ததாகவும் திருடர்கள் இவற்றை திருடிக்கொண்டு போய்விட்டனர். தற்போது மண்மூடைகளையாவது போட்டு நன்னீர் கடலுக்குச் செல்வதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும் விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கின்றனர். (202-135)

## தேங்காய் விலை அதிகரிப்பு

குருநகர்,செப்.4

குருநகர் பிரதேசத்தில் தேங்காயின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. இது வரை 20 ரூபாவாக விற்கப்பட்ட தேங் காய் ஒன்று தற்போது 40ரூபாவாக விற்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தீவகத்திலுள்ள அனலைத்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு பகுதிகளிலிருந்து பெருந்தொகையான தேங்காய்கள் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினூடாக எடுத்துவரப்பட்டு தேங்காய் ஒன்று 35 ரூபாயிலிருந்து 40 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (202-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...



சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபை, மத்திஸ்த தின விழாவை அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தியது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் சபையின் தவிசாளர் கு.ஜெகநாதன், யாழ். மாவட்ட மத்தியஸ்தர், பயிற்றுநர் க.கணேசராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)



சுழிபுரம் - வழக்கம்பரையிலுள்ள முதியோர் இல்லத்தில் ஆடி அமாவாசை தின விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும் விழாத் தலைவர் ஆறு.திருமுருகன், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், அமெரிக்க ஹவாய் நாட்டிலிருந்து வருகை தந்த தொண்டுலிங்க சுவாமிகள், தெல்லிப்பழை கோட்டக் உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: சுழிபுரம் செய்தியாளர்)



திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் விழாவில் கலாமன்ற மாணவர்கள் தமிழ் வணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)



கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் மு.பரஞ்சோதியின் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் கலாசாலையில் நடைபெற்றது.

விழா நாயகன், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, விரிவுரையாளர்களான செ.குமாரசாமி, கலாநிதி செ.திருநாவுக்கரசு, இ.மருதலிங்கம் மற்றும் மாணவர் மன்றத் தலைவர் செ.செல்வச்சந்திரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சதா பொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியத்தின் அங்குரார்ப்பண வைபவத்தின்போது பெற்றோரை இழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உதவித் தொகை வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: சுந்தா)


## தவறிவிட்டது

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த அப்புத்துரை நந்தகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (703374026V) 31.08.2007 அன்று திருநெல்வேலி சந்தைப் பகுதியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் மகா கணபதி களஞ்சியம் 315, அரசடி வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P:- 0774078753,0779587323 (64493)

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலைகளுக்கு அண்மையில் ஈச்சமோட்டை வீதியில் நான்கு பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: S.S.நாதன்,
16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P:- 0776146434 (64478)


## ஆயுதங்களுடன் கருணாகுழு திருமலைநகரில் நடமாடுகின்றது

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

கொழும்பு,செப்.4

திருகோணமலையில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் (கருணா குழு) இயக்க உறுப்பினர்கள் பலர் ஆயுதங்களுடன் பகிரங்கமாக நடமாடித் திரிவதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 20 ஆம் திகதி முதல் 26 வரைக்கான குழுவின் வாராந்த அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பில் அரசியல் சிக்கல்கள் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

ஓமந்தை காவலரணுக்கூடாக உணவுப் பொருள் எடுத்துச் செல்வது இலகுவாகியுள்ளதைக் கவனிக்க முடிகிறதென்றும் வன்னியிலிருந்து வெளியிலும் வெளியிலிருந்து வன்னிக்கும் அதிக பொருள்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (அ-ப)

## கதவுகள் திருடிய இருவருக்கு 23ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு,செப்.4

வீட்டுக்கதவுகளை திருடியது மற்றும் கதவுகளை மறைத்து வைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் 23ஆயிரம் ரூபா அபராதத்தை விதித்தார்.

முதலாவது குற்றவாளியான அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை ரமேஷ் என்பவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

இரண்டாவது குற்றவாளியான உடுவில், ஆலடியைச் சேர்ந்த செல்லத்தம்பி அருச்சுணனுக்கு 2மாத கடூழிய சிறைத்தண்டனையும் 13 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

உரிய அபராதத்தைக் கட்டத் தவறும் சந் தர்ப்பத்தில் மேலும் 13மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்வும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (202-86)

## மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்

உடுப்பிட்டி,செப்.4

வல்வெட்டியில் கண்ணாடிவழங்குவதற்காக பரிசோதிக்கப்பட்டவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் எதிர்வரும் 20ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதி அமரர் த.சுகந்தனின் 2ஆம்ஆண்டுநினைவாக அவரது குடும்பத்தினர் லயன்ஸ் கழக ஆதரவுடன் கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தி மூக்குக்கண்ணாடிகளையும்வழங்கினர். அம்மூக்குக் கண்ணாடி பெறத் தவறியவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வல்வெட்டி சித்தி விநாயக ஸ்ரோர்ஸ் வர்த்தக நிலைய முன்பாக வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (155)


## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

காலம்: 23.09.2007

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகச் சபைத் தெரிவும் 23.09.2007ஆம் திகதி தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றதென்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறோம்.

உபவிதி 26இன் 7ஆவதின் பிரகாரம் மேற்படி வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் பிரேரணைகள் பிரேரிக்க விரும்பும் உறுப்பினர்கள் அப்பிரேரணையின் பிரதியை 13.09.2007 அன்று நண்பகல் 12 மணிக்கு முன் மாவட்ட சங்கச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் பிரேரணைகள் பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாதென்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இ.பேரின்பநாயகம் — தலைவர்.
கா.பாஸ்கரன் — செயலாளர்.
(சி/53554)

## துயர் பகிர்கின்றோம்

எமது திணைக்கள சாவகச்சேரி பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி குகதாசன் ரதீஸ்குமாரி அவர்களது அன்பு மகள்

செல்வி குகதாசன் துசாரா

அவர்கள் 28.08.2007 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு திரு.திருமதி குகதாசன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்திக் குடும்பம்.
(64191)

## கண்ணீர் அஞ்சலி

சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் கல்விக் குழுவின் முன்னாள் தலைவர்
சுப்பிரமணியம் ஜீவகுதன்
அவர்களின் பாசமிகு மனைவி

திருமதி ஜீவசுதன் தமிழ்ப்பிரியா

அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம்.
(64186)

## கண்ணீர் அஞ்சலி

கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்டக் காரியாலயத்தின் உதவிப்பணிப்பாளர் இ.ஜெயமனோன் அவர்களின் அன்புத் தந்தை

வைத்தி அன்ரன் இராசநாயகம்

02.09.2007 காலமாகியதையிட்டு அன்னாரின் மறைவால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலர்கள்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.
(64475)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 06.09.2007 பி.ப. 2 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி : 12.09.2007 பி.ப. 2 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 12.09.2007 பி.ப. 2.30 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் (ரூபா) |
|---|---|---|
| 1. விஞ்ஞானபீட மேற்குப் பகுதி மற்றும் கலைப் பீட கட்டடத் தொகுதி நடு முற்றம் ஆகிய இடங்களில் மண் நிரப்பு வேலைகள் | 5,000.00 | 500.00 |
| 2. ஆனந்தகுமாரசாமி விடுதியில் கிறவல் பாதையின் இருமருங்கும் தடுப்புச் சுவர் அமைத்தல் | 10,000.00 | 500.00 |
| 3. பல்கலைக்கழக திருநெல்வேலி வளாகத்தில் 02 மின்பிறப்பாக்கி அறைகள் அமைத்தல் | 20,000.00 | 500.00 |
| 4. பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் மின்பிறப்பாக்கி அறையொன்று அமைத்தல் | 10,000.00 | 500.00 |

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல.57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்கைள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
03.09.2007
(சி/53553)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள்; 199 பேர் கொண்ட அணி இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம், செப். 4

கொழும்பில் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மூன்று கட்டங்களாக நடைபெறவிருக்கும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் முதலாவது அணி இன்று இங் கிருந்து புறப்படவுள்ளது.

முதல் கட்டமாக இடம்பெறவிக்கும் 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், கூடைப்பந்தட்டம், உடற்பயிற்சி ஆகிய போட்டிகளில் கலந்துகொள்ள 199 மாணவ, மாணவிகள் இன்று பயணமாக உள்ளனர்.

கப்பலில் பயணம் செய்யவிருக்கும் இவர்களை இன்று காலை 7 மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 38 ஆசிரியர்களும் 135 மாணவர்களும்-

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இருந்து 07 ஆசிரியர்களும் 34 மாணவர்களும் -

இப் போட்டிகளில் கலந்துகொள்ளவென தீவகப் பாடசாலைகளில் இருந்து 02 ஆசிரியர்களும் 30 மாணவர்களும் செல்லவுள்ளனர். மாவட்டத்தில் இருந்து ஆசிரியர்கள் 47 பேரும் வீர, வீராங்கனைகள் 199 பேருமாக மொத்தம் 236 பேர் கொழும்பு செல்லவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(அ-1-68)

# மகாத்மா காந்தி புலமைப்பரிசில்; மாவட்டத்துக்கு 4 பேர் வீதம் தெரிவு




கொழும்பு, செப். 4

மகாத்மா காந்தி புலமைப்பரிசில் நிதியத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்குச் சான்றுப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு கலா பவனத்தில் இடம்பெற்றது.

இந்தியத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 24 தமிழ் மாணவர்களும் அடங்குவர். யாழ்ப்பாணத்தில் - தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் நான்கு மாணவர்களும் -

முல்லைத்தீவில் வித்தியானந்தா கல்லூரி, முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகியவற்றின் நான்கு மாணவர்களும் - புலமைப்பரிசில் பெற்றுள்ளனர்.

பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்கு எதிராக மகாத்மா காந்தி நடத்திய சாத்வீக முறையிலான சத்தியாக கிரகப் போராட்டத்தின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி, இலங்கைக்கான இந்தியத் தூதரகம் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்குசெய்து நடத்தியது.

மகாத்மா காந்தி புலமைப்பரிசில் வழங்குவதற்கென மாவட்டத்திற்கு 4 மாணவர்கள் வீதம் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (அ-1-202)

# மக்களை கேடயமாகப் பயன்படுத்தியே சிலாவத்துறை கைப்பற்றப்பட்டுள்ளது

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, செப். 4

மன்னாரில் சிலாவத்துறையில் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களை இடம்பெயர வைத்த அரசின் நட வடிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையா கக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கூறியவை வருமாறு:-

சிலாவத்துறைப் பிரதேசத்தை கைப்பற்றியதன் மூலம் அரிப்புப் பிரதேசம், நாணாட்டான், கொக்குப்படையான் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த பொதுமக்கள் 6 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர். இவர்களில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் மூலம் எடுத்துச் செல்லும் போது அருவியாற்றுப் பகுதியில் உள்ள இராணுவ சோதனை நிலையத்தில் மறித்து தாமதப்படுத்தியதால், காயமடைந்த ஒருவர் இறககநேரிட்டுள்ளது.

மக்களை இராணுவத்தினர் கேடயமாகப் பயன்படுத்தியுள்ளனர். அது மட்டுமன்றி, தொடர்ந்தும் இப்பிரதேசங்களை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தி வாழ்விடங்களை சேதமாக்கி வருகின்றனர்.

இச் செயற்பாட்டை அனைத்துலகம் கண்டும் காணாமலும் இருந்துவிடமுடியாது. இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

# வாசகர் திருமுகம்

## பரீட்சை நேர சூசியை மாற்றி அமைப்பார்களா?

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றும் வெட்டுப் புள்ளி காரணமாகப் பல்கலைக்கழகக் கல்வியை எட்டிப் பிடிக்க முடியாமல் தட்டுப்பட்டுப்போன எம்மைப் போன்றவர்களிற்கு யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் அலகு ஓர் வரப்பிரசாதமாகும்.

மிக நீண்டகாலமாக அதன் செயற்பாடுகள் (2003 - 2006 வரை) ஸ்தம்பித்திருந்த போதிலும் மீண்டும் 2007 ஆம் ஆண்டு முதல் புதிய உத்வேகத்துடன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதும் விரைவான சேவைகளை வழங்கி வருவதும் வரவேற்கத்தக்கதே. ஆனாலும் அதே வேகத்தில் சில இடர்பாடுகளை நாம் சந்திக்க வேண்டி இருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அவற்றுள் முதன்மையானது நேரசூசி. நடைமுறைகளுக்கு மாறாக பரீட்சை அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு இருப்பதுதான்.

சாதாரணமாக ஜி.சீ.ஈ.(உ/த) பரீட்சையின் போதோ அல்லது பல்கலைக்கழக உள்வாரிப் பரீட்சைகளின் போதோ இல்லாத புதிய நடைமுறையொன்று வெளிவாரிப் பரீட்சை அலகினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மிகக் குறுகிய காலத்தினுள் மிகவும் விரைவாகப் பரீட்சைகளை நடத்தி முடித்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கில் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொள்ளாது, அடுத்தமாத இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ள கலைமாணி பகுதி II இற்கான நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு பரீட்சையிலும் பிரதான பாடங்கள் இரண்டு ஒரே நாளில் நடத்தப்படுவது இல்லை. ஒரு பிரதான பாடத்திற்கும் மற்றைய பிரதான பாடத்திற்கும் இடையில் ஒரு நாளாவது இடைவெளி தருவது வழமை. ஆனால், இம்முறை பிரதான பாட அலகுகள் இரண்டு, காலையிலும் மாலையிலுமாகப் பட்டியல் இடப்பட்டு இருக்கின்றன. கடினமான குறிப்புகளையுடைய இரண்டு பாட அலகுகளிற்கு ஒரே நேரத்தில் தயாராவது கடினம் என்பது ஒருபுறம் இருக்க, தற்கால அசாதாரண சூழ்நிலையில் போக்குவரத்துப் பிரச்சினை உட்பட பல சிக்கல்களிற்கு மாணவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உதாரணமாக குறித்த வொரு நாளில் காலை பொருளியலும் மாலை அரச அறிவியலும் பட்டியலிடப்பட்டு இருப்பதைக் குறிப்பிடலாம்.

எனவே தற்கால நிலைமையைக் கருத்தில் கொண்டாவது பல்கலைக்கழக வெளிவாரி அலகின், உயர் அதிகாரிகளும் பரீட்சையுடன் சம்பந்தப்பட்டவர்களும் மாணவரின் நிலையைக் கருத்திற்கொண்டு மாற்றியமைக்கப்பட்ட நேரசூசியை வெளியிட ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

கலைமாணி பகுதி II மாணவர்கள்,
வெளிவாரிப்பிரிவு.

## கோயில் ஒலி பெருக்கிகளால் ஏற்பட்டுவரும் உபத்திரவம்

கோயில்களில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி பத்திரிகைகள் மூலமாக மட்டு மன்றி வேறு வழிகளிலும் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாளாந்தம் அளவுக்கு மீறிய இப்பயன்பாடு அதிகரித்துக் கொண்டே போய் தாங்கமுடியாத கட்டத்திற்கு வந்து விட்டது.

குறிக்கப்பட்ட சிலருடைய வசதிகளைப் பறைசாற்றுவதற்காகக் கோயில்கள் விஸ்தரிக்கப்படுவது போன்று சில ருடைய அறியாமையைப் பறை சாற்றுவதற்கு ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இதில் அவர்களாகவே திருந்துவதற்கு ஏது நிலை இல்லை.

சட்டரீதியான நடவடிக்கை தான் ஒரே வழி. தீர்வைக் கொண்டுவருவதற்கு இது சுலபமான வழிதான். ஆனால் இதன் விளைவுகள் தீமை தரக்கூடியவை. அவசியமில்லாமல் அதிகார வர்க்கத்தை இன்னும் ஒருபடி மேலே எங்களுடைய அன்றாட வாழ்வில் தலையிட இடமளிப்பதோடு மட்டுமல்லாமல் இது அயலவர்கள் அறிமுகமானவர்கள் மத்தியிலே பகை வளரவும் உதவி செய்யும்.

ஆகவே சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள், சமய நிறுவனங்கள், கோயில் நிருவாகங்கள் இதைப் பற்றிக் கவனமெடுத்து முக்கியமாக நோயாளர், மாணவர்கள் போன்றோரையாவது இத்தீமையிலிருந்து காப்பாற்ற முன்வரவேண்டியது அவசியம். தவறினால் பாதிக்கப்படுவோர் [illegible] ரீதங்கள் ஏற்பட இடமளிப்பதாகிவிடும்.

கொக்குவில். வை. சந்திரபாலன்

# சுவிற்ஸர்லாந்து தூதுவரிடம் மன்னார் சம்பவம் குறித்து ஈழவேந்தன் எம்.பி. விளக்கம்

கொழும்பு, செப். 4

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனுக்கும், இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து நாட்டின் தூதுவர் ருத் பிளின்ட்டுக்கும் இடையிலான திடீர்ச் சந்திப்பு ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் கொழும்பு-கட்டுநாயக்க விமான் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈழவேந்தன் சர்வதேச நாடு ஒன்றுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் கடந்த சனிக்கிழமை அன்று கட்டுநாயக்க விமான நிலையம் சென்றிருந்தார்.

இவ்வேளையில், விமான நிலையத்தில் தூதுவர் ருத் பிளின்ட் வந்திறங்கினார். அப்போது இருவரும் சந்தித்து சுமார் 15 நிமிடங்கள் வரை கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது நாட்டில் இடம்பெற்றுவரும் மோசமான நிகழ்வுகள் தொடர்பாகவும், மன்னாரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஈழவேந்தன் சுவிற்ஸர்லாந்து தூதுவர் ருத் பிளின்ட்டுக்கு எடுத்து விளக்கினார் என்றும்-

'இந்த விடயங்கள் தொடர்பாக தான் கவனத்தில் கொள்வார்'என சுவிற்ஸர்லாந்து தூதுவர் தெரிவித்தார் - என்று அறியப்பட்டது. (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் பதினெட்டாம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை 'தமிழோடு இசைபாட மறந்தறியேன்' என்னும் தலைப்பில் இ. ஸ்ரீதரன் சொற்பொழிவாற்றுவார்.

வடலியடைப்பு இந்து அபிவிருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203-79-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக் - குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குந் தான். - யோகர் சுவாமிகள்

நல்லைக்கந்தனை நாளும் தொழுவோர்க்கு...

நல்லைக் கந்தனை நாளும் தொழு வோர்க்கு
வல் வினை நோய் வந்து மிக வாட்டா தாம்
கல்விப் பெரும் செல்வம் கலைஞானம் கை கூடும்
வல்லவராய் வாழ்வர் சிறந்து - விகடகவி.

காத்தருள்வாய் கந்தா!

குஞ்சரி வள்ளிசூழ குக்குடம் கொடியில் கூவ
மஞ்ஞையில் ஏறும் முத்துக் குமரனே! வேலா!
தஞ்சம் என்றுந்தன் திருவடி தொழுதே நாம்
கெஞ்சு கின்றோம் காத்தருள்வாய் காருண்யனே!

- நாயன்மார்க்கட்டு ப. மகேந்திரதாசன்

நல்ல தீர்வொன்று தந்துவிடு

நாலு சொல்லையே மாற்றி மாற்றி நாங்களும் கவிஞரென்று
நாயையும் போற்றுகின்றோம் பேயையும் புழுகுகின்றோம்
பச்சையைச் சிவப்பென்று பந்தம் பிடித்த பழக்க மிது
சூரனை யழித்தாயென்றார் சூழ்வினை கடிந்தாயென்றார்
விதியினைக் கூட மாற்ற எங்கள் வேலனால் முடியுமென்பார்
கந்தா நீ எங்கள் கண் கண்ட தெய்வமானால்
ஊரடங்கு முன்னே எம்மைப்போல் ஓடி ஒழித்திடாது
தேரோடு முன்னேயேறும் நல்ல தீர்வினைத் தந்துவிடு

- கவிமணி அன்னைதாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
## 2008 ஆம் ஆண்டுக்கான புதிய அனுமதி

தரம் 2, தரம் 3 வகுப்புகள் தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 05.09.2007 இல் இருந்து ஞாயிறு பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப.9 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம், பரீட்சைக் கட்டணம் உட்பட ரூபா 300/=

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 29.09.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக நேரில் வந்து ஒப்படைக்கவும். தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

முதலாம் வகுப்புக்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.2002 ஆம் திகதிக்கும் 31.01.2003 ஆம் திகதிக்கு மிடையில் பிறந்திருக்க வேண்டும்.

ஐந்தாம் தரத்திற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.1998 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருக்க வேண்டும்.


ஆறாம் தரத்திற்கு அனுமதி கோரும் பிள்ளைகள் 01.02.1997 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருக்க வேண்டும்.

புதிய அனுமதிக்கான பரீட்சை 06.10.2007 சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகும். விண்ணப்பித்தவர்கள் சமுகம் கொடுக்க வேண்டிய நேரம் மு.ப. 8.30 மணி.

-அதிபர்.

## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 20 . 05 . 1931



மண்ணின் மடியில் 04 . 09 . 2006

### அமரர் தம்பிராசா அந்தோனிப்பிள்ளை
(செபரட்ணம்)

எங்கள் வீட்டு ஒளி விளக்கே!
எங்களை வாழ வைத்த தெய்வமே!
அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் மலர் போற்றப் பாரினிலே
வாழ்ந்தீர் எம் தெய்வமே!

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதப்பா உங்கள் பிரிவு
என்றும் எங்கள் உள்ளங்களில்
என்றும் நிறைந்திடும் அப்பாவே!
ஆறாது எம் துயரம்
நீங்காது என்றும் உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை (64469)

தகவல்:
குடும்பத்தினர்.

## உடன் விற்பனைக்கு
MD-XXXX தொடரிலக்கமுடைய TVS GLX 125 CC Motor Cycle, 1000 CC, EN-7325 இலக்கமுடைய காரும் விற்பனைக்குண்டு.
சின்னப்பா வீதி, நவாலி தெற்கு.
(ச.53548) தொடர்பு: 0777 252015

## ஜெஸ்மின் பியூட்டி சென்டர்
* FACIAL (5 TYPES)
* EYE BROW SHAPPING (2 TYPES)
* BLEACH (2 TYPES)
* HAIR STYLE
* மணப்பெண் அலங்காரம் (4 TYPES)
* முடி நீளமாக்கல், சுருளாக்குதல்
* கை அலங்காரம்

ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகளுக்கும் ஓடர்களுக்கும் நாட வேண்டிய இடங்கள்:
I. ஜெஸ்மின் பியூட்டி சென்டர், சாவகச்சேரி.
II. மீனாட்சி கோயிலடி, சங்கத்தானை.
III. மயிலணி, சுன்னாகம்.
(64463)

தொடர்புகளுக்கு:
R.KEETHA
T.P.: 0776184085, 0779466370.

## ஓடுகள் திருடி விற்றவர் பொலிஸாரிடம் சிக்கினார்

வலி.வடக்கு,செப்.4

ஆள்கள் இல்லாத நேரத்தில் வீட்டு ஓடுகளை திருடிவிற்பனை செய்து வந்த சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

கும்பிளான் வடக்கைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜனி இளங்கோவன் முன்னிலையில் சந்தேகநபர் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார். (203-86)

## சைவப்பாரம்பரியத்துடன் நீராவியடியில் முன்பள்ளி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் சைவத்தமிழ் பாரம்பரியத்துடன் சிறுவர்களுக்கான முன்பள்ளி நீராவியடியில் நடத்தப்பட்டு வருகின்றது. இம் முன்பள்ளியில் கட்டணமின்றி இலவ சமாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என சபையினர் தெரிவித்தனர். (202)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் காளியம்பாள் ஆலய அலங்காரத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறவுள்ளது.

* * *

வடகோவை சக்கராழ்வார் ஆலய உறியடி உற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும். (72)

வசீகர தோற்றத்திற்கு
## சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

சிறப்பு கட்டணச் சலுகை
IBMS
## கணனிக் கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| பிரிவு I | 12.09.2007 | பகல் 10.00 மணி |
| பிரிவு II | 15.09.2007 | |
| பிரிவு III | 28.09.2007 | |
| பிரிவு IV | 29.09.2007 | |

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office | -3 | 1000/= |
| Diploma in Dest Top Publishing | -3 | 1000/= |
| Diploma in Internet Technology | -3 | 1500/= |
| Dip. in Hardware Engineering | -3 | 2000/= |

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 8060
கிளை : சங்கத்தானை, சாவகச்சேரி

## மரண அறிவித்தல்



### சுந்தரம் காளிராசா
(முன்னாள் ஊழியர் C.T.B. )

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் காளிராசா 02.09.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம்- பாக்கியம் தம்பதியரின் மருமகனும் பாலாம்பிகையின் அன்புக் கணவரும் லக்சுமிகாந்தன் (கண்ணன்), சிவாங்கி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவநேசனின் (கனடா) அன்பு மாமனும் அன்னலட்சுமி, சரவணபவானந்தன் (அப்பர்), பாலசுப்பிரமணியம் (பாலா, சம்பந்தர் கிளினிக், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (ச.53647)

தகவல்:
மனைவி, மகன்.

## ஆண்டொன்றில் மாறாத நினைவுடன்.....

மண்ணில் 15 ★ 09 ★ 1936



விண்ணில் 14 ★ 09 ★ 2006

### அமரர் சின்னப்பு இராமலிங்கம்
திதி: அபரபட்ஷ அட்டமி

உங்கள் மாறாத நினைவுச் சுமைகளால்
நெஞ்சம் கனத்திட......
விதியினை நொந்து மனம்
விழிநீரைச் சிந்தித் தினம்
ஆண்டவனைப் பிரார்த்தித்து- உம்
ஆத்மசாந்திக்காக வேண்டுகின்றோம்.

298, கோயில் வீதி, நல்லூர். (64458)
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### இரத்தினசிங்கம் பிரசாத்

தோற்றம் 21.09.1982
மறைவு 15.09.2006



திதி: அபரபட்ஷ அட்டமி

அன்பின் தம்பி பிரசாத்
அனைத்து உறவுகளையும்
அன்பினால் வாஞ்சித்தவனே
ஆண்டு ஒன்று ஆனதுவே
உனைப் பிரிந்து

எம் நெஞ்சம்
ஆண்டுகள் நூறானாலும்
உனை மறவாது.

இல: 33, அரசவிதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (64472)

உன் பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பட்டறிவுப் பாடத்தை இன்னும் புரியத் தவறியுள்ள தலைவர்கள்

ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 56 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது கட்சியின் ஸ்தாபகர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்காவின் தற்போதைய வாரிசுகளை சாடைமாடையாகச் சாடினாலும், பண்டாரநாயக்கா புகழ் பாடத் தவறவில்லை.

தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்து, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை இலங்கைத் தீவில் ஸ்திரமாக நிலைநிறுத்தி, இந்த நாட்டில் இன்று இவ்வளவு மோசமாக இரத்த ஆறு ஓடுவதற்கு வித்திட்ட அமரர் பண்டாரநாயக்காவை, அதே கொள்கையை இப்போதும் முழு அளவில் கைக்கொள்ளும் இந்த அரசுத் தலைமையும் புகழ்ந்து ஏத்துவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

இந்தச் சமயத்தில், இந்து சமுத்திரப் பிராந்தியத்துடன் வைத்துப் பார்த்தால் யாழ். குடாநாடு அளவுடைய ஒரு குட்டித் தீவை, பொருளாதாரத்திலும், மக்களின் வாழ்க்கை நிலையிலும் மிகச் செழிப்புற்ற பிரதேசமாக உயர்த்திய ஒரு தலைவரின் கருத்தை நினைவு கூர்ந்து, அந்தப் பின்னணியில் பண்டாரநாயக்காவின் அரசியல் கலாசாரத்தை நோக்குவது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து 1959 இல் விடுபட்ட சிங்கப்பூரை, 1990 இல் தாமாகப் பதவியிலிருந்து விலகும்வரை சுமார் 31 ஆண்டு காலம் பிரதமராக இருந்து, ஆட்சி செய்து அந்நாட்டை வளப்படுத்திய - பொருளாதார ரீதியில் வலுப்படுத்திய - பல்வேறு இன, மத, பேச்சுமொழி கொண்ட சமுதாயத்தை ஐக்கியத்துடனும் இன சௌஜன்யத்துடனும் கட்டி எழுப்பிய - 'ஒரே தலைவரான லீ குவான் யூ, இப்போது குறிப்பிடும் கருத்தே இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகின்றது.

ஒரு தனிநாடாக நிமிர்ந்து நிற்பதற்கு எந்த அடிப்படைக் கட்டுமானமும் இல்லாத நிலையில் திடீரென பிரிட்டனிடமிருந்து தனிநாடாக விடுதலை பெற்ற சிங்கப்பூரை சரியான திசையில் வழி நடத்துவதில் ஆரம்பம் தொட்டே மிகத் தீர்க்க தரிசனத்துடன் செயற்பட்டார் லீ குவான் யூ.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அதே தீர்க்க தரிசனத்தை 1920 - 30 களில் தம்வசம் கொண்டிருந்த அமரர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, பின்பு ஐம்பதுகளின் நடுப்பகுதிக்குப் பின்னர் தாம் ஆட்சிப் பீடத்துக்கு வந்த சமயம், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையில் ஊறி, நாட்டையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் இழி செயலுக்கு வழி செய்து பழி சுமப்பவரானார்.

1925 - 26 இல் இலங்கைத் தீவுக்கு சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வே பொருத்தமானது என்று உண்மையை வலியுறுத்திய பண்டாரநாயக்கா, பின்னர் சுமார் முப்பது ஆண்டுகள் கழித்து தனிச் சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்துக்குள் நடைமுறைப்படுத்த உறுதி பூண்டமை இந்தப் போக்கில் தான் என்று வரலாறு நமக்கு செய்தி பகர்கின்றது.

இலங்கை பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் பெரும்பான்மை பௌத்த - சிங்கள ஆட்சியாளர்களின் கருத்துருவாக்கத்தில் முன்னெடுக்கப்பட்டதான - சிறுபான்மையினரை ஒடுக்குகின்ற - அரச அடக்கு முறையை, சிங்கப்பூர் பின்பற்றாமல் தவிர்த்துக் கொண்டதன் மூலம் - தாராளமாக நடந்துகொண்டதன் வாயிலாக - தப்பிப் பிழைத்து, அமைதிப் பூங்காவாக அது மலர்ந்திருக்கின்றது.

சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற சமயம் அங்கு வாழும் பெரும்பான்மை மக்கள் சீன, மலே மொழி பேசுபவர்களாக இருந்தனர். சிறுபான்மையினராக தமிழர்களும் வாழ்ந்தனர்.

*''பெரும்பான்மையினராக சீன மொழி பேசுவோரே இருந்தனர். ஆனால் கல்விக்கான மொழியாக அதைத் தெரிவுசெய்யாமல் ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக நாம் பேணியதால் மேலெழுந்தோம். தப்பித்தவறி பெரும்பான்மையினர் பேசுகின்ற சீன மொழியை அரச மொழியாக நாம் தேர்ந்திருந்தோமானால் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நமது நாடும் நாமும் அழிந்திருப்போம்.*

*''நாங்கள் இப்போது இலங்கையைப் பார்க்கின்றோம். அவர்கள் (சுதந்திரம் பெற்றதும்) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாறினார்கள். தமிழர்களின் வாக்குரிமையை இல்லாது செய்தனர். அதன் பின்னர் எப்போதுமே அங்கு யுத்தம் தான்.*

*''ஆங்கிலம் எமது தேசிய மொழியாக இல்லாதபோதும் நாம் அதனை எமது வேலைக்கான மொழி ஆக்கிக் கொண்டோம்.''*

- என்று அண்மையில் தாம் வழங்கிய பேட்டி ஒன்றில் விளக்கியிருக்கிறார் சிங்கப்பூரின் முன்னாள் அதிபர் லீ குவான் யூ.

இலங்கையைப் பொறுத்தவரை பௌத்த மத மறுமலர்ச்சி என்ற சுலோகத்தின் கீழ் சிங்களப் பேரினவாதம் எழுச்சி பெற்றது. இலங்கைத் தீவு பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்ட போது இந்தப் பேரினவாத இருள் இலங்கைத் தீவை முற்றாகப் பற்றிப் பிடித்து ஆக்கிரமித்தது.

அதுவரை, ஒருபுறம் சிறுபான்மைத் தமிழரையும் மறுபுறம் ஐரோப்பிய குடியேற்ற வாதிகளையும் கடுமையாகச் சாடி, சிங்கள - ஆரிய இனப் பெருமையைப் புகழ்ந்துரைந்து நின்ற பௌத்த தேசியத் தலைமை, இலங்கைத் தீவு சுதந்திரமடைந்து அதன் ஆட்சி அதிகாரம் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் கைமாறியதை அடுத்து முழு அளவில் எழுச்சி கொண்டது. அதுவரை, கருத்து நிலையில் இருந்து வந்த - சிறுபான்மையினரான தமிழருக்கு எதிரான - காழ்ப்புணர்வு நாட்டின் சுதந்திரத்தை அடுத்து திண்ணிய, சமூக, அரசியல், பொருளாதார, இன ஒடுக்குமுறையாகக் கோர வடிவம் எடுத்ததைக் கண்டோம்.

அந்தத் தடத்தில் செல்லாமல் நியாயத்துடனும், தாராளத்துடனும், ஏனைய இன, மொழி, மத மக்களை சகோதரர்களாக சமத்துவத்துடன் மதித்து நடக்கும் பண்போடும் செயற்பட்டதால் சிங்கப்பூர் உயர்ந்து நிற்கின்றது.

அதை, இவ்வளவு பட்டறிவுக்குப் பின்னரும் புரிந்து கொள்ளாமல், பெரும் தவறிழைத்த தலைவர்களைத் தொடர்ந்து தலைமேல் இருத்திப் புகழ்ந்து கொண்டும், அவர்கள் விதித்த - விதைத்த - பேரினவாதச் சிந்தனையில் மேலும் மூழ்கிக் கொண்டும் கொழும்புத் தலைவர்கள் 'அரற்றிக்' கொண்டிருப்பது - பழைய 'அலட்டல்' பல்லவியையே தொடர்வது - இந்த நாட்டை மென்மேலும் யுத்தக் களரிக்குள்தான் ஆழ்த்தும். இவ்வளவு காலம் கடந்தும் இது அவர்களுக்குப் புரியாமல் இருப்பது விந்தைதான்.

# சிலாவத்துறையை படைகள் கைப்பற்றியது குறித்து இராணுவப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு,செப்.4

அரசுப் படைகள் சிலாவத்துறையைக் கைப்பற்றியமை ஏன்?

இதற்கான விளக்கத்தை நேற்று கொழும்பில் இடம்பெற்ற - பாதுகாப்புத்துறை தொடர்பான - பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சமரசிங்க வெளியிட்டார். அவர் அங்கு இதற்காகக் கூறிய காரணங்கள் வருமாறு:-

முன்னர் தென்னிலங்கையில் தாக்குதல் நடத்துவதற்காகத் தற்கொலைத் தாக்குதல் உறுப்பினர்களை கிழக்கு மாகாணத்தில் இருந்தே புலிகள் கொழும்பு மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பி வந்தனர். இப்போது கிழக்கு மாகாணம் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் - அதன் பின்னர் - சிலாவத்துறை, அரிப்பு போன்ற பிரதேசங்களில் இருந்தே புத்தளம் பகுதி ஊடாகத் தெற்குக்கு தாக்குதல் நபர்களைப் புலிகள் அனுப்பி வந்தனர்.

அது மட்டுமல்லாமல்,, வில்பத்து தேசிய வனப் பூங்காப் பகுதிக்கு அவ்வப்போது அச்சுறுத்தல் ஏற்படுத்தி வந்த பயங்கரவாதிகளும் இப்பிரதேசத்திலிருந்தே செயற்பட்டு வந்தனர்.

அத்தோடு, இப்பிரதேசத்தில் அரசுப் படைகள் நிலைகொள்ளாத காரணத்தால், இப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் பொதுமக்கள் புலிகளின் பிடியில் சிக்கியிருந்தனர். இவர்களையும் விடுவிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

இந்தக் காரணங்களுக்காக இப்பகுதி யைத் துப்புரவு பண்ணும் கட்டாயம் அரசுப் படைகளுக்கு ஏற்பட்டது. அதன் காரணமாகவே அங்கிருந்து புலிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அது வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்தது.

இது, புதிதாக ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை அல்ல. அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் அப்பிரதேசம் இருப்பதை உறுதிப்படுத்தும் ஒரு செயற்பாடு மட்டுமே. - என்றார் பிரிகேடியர் சமரசிங்க. (சி)

# உயிலங்குளம் பாதை மீண்டும் மூடப்பட்டது; மறுஅறிவித்தல் வரை போக்குவரத்து இடைநிறுத்தம்

கொழும்பு,செப். 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கும் அரசுப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கும் இடையிலான - உயிலங்குளம் ஊடான - பயணிகள் பாதை மறு அறிவித்தல்வரை போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிலங்குளம் பாதையில் பிரசன்னமாகி இருந்து, இப்போக்குவரத்துக்கு அனுசரணை உதவி வழங்கி வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அந்தப் பணியை மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தியிருப்பதை அடுத்தே இந்தப் பாதைப் போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கின்றது.

இப்பகுதியில் அடிக்கடி இடம்பெற்றுவரும் மோதல்களை அடுத்து வாரத்தில் மூன்று நாள்கள் - திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் - மட்டுமே இந்தப் பாதை ஊடாகப் போக்குவரத்து இதுவரை இடம்பெற்று வந்தது.

**சடலங்களை எடுத்துச் சென்றபோதும் ஷெல் தாக்குதல்**

இந்நிலையில் யுத்தத்தில் உயிரிழந்த அரச படைகளின் சிப்பாய் ஒருவரது சடலத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து பொறுப்பேற்று அரசுத் தரப்புக்கு ஒப்படைக்கும் சேவையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் கடந்த சனியன்று ஈடுபட்டிருந்த சமயம், அப்பகுதியில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இதேபோல, சிலாவத்துறைப் பகுதியில் உயிரிழந்த பன்னிரண்டு பொதுமக்களின் சடலங்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் பணியில் கடந்த ஞாயிறன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் ஈடுபட்டிருந்த சமயமும் இடையில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்தத் தாக்குதல்கள் எவையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரை இலக்கு வைத்து நடத்தப்படவில்லை என்பதை குழுவின் அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

எனினும், இவற்றை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்து அரசுத் தரப்புடனும் புலிகள் தரப்புடனும் மேற்கொண்டு பேச்சு நடத்த வேண்டும் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கருதியுள்ளதாகவும் -

இரு தரப்புகளுடனும் பேசி, நிலைமையை சீர் செய்யும் வரை உயிலங்குளம் பாதையில் பிரசன்னமாகியிருக்கும் தமது சேவையை இடைநிறுத்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தீர்மானித்துள்ளதாகவும் -

குழுவின் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# கிளிநொச்சி விபத்தில் கணவன்-மனைவி பலி

கிளிநொச்சி,செப்.4

கிளிநொச்சி, இரத்தினபுரம் வீதியில் கடந்த ஞாயிறன்று பிற்பகல் 1.10 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் கணவனும் மனைவியும் உயிரிழந்தனர்.

டிப்போச் சந்தியில் இருந்து இரத்தினபுரம் நேக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் இரத்தினபுரத்திலிருந்து டிப்போச் சந்தி நோக்கிச் சென்ற கன்ரர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் வாகனத்தின் முன் பகுதிக்குள் மோட்டார் சைக்கிள் சிக்குண்டு சிறிது தூரம் இழுபட்டுச் சென்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த - புலோப்பளையைச் சொந்த இடமாகவும் கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட - யாக்கோப்பு சந்தியாப்பிள்ளை (வயது - 58), அவரது மனைவி சந்தியாப்பிள்ளை திரேசம்மா (வயது - 51) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் இருவரும் உயிரிழந்தனர்.(சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 19 | புதன்கிழமை 05.09.2007 |
| திதி : நவமி | முன்னிரவு 09.27 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் மு.இ. 10.01 |
| சுபநேரம் | : 04.35 - 06.05 |
| [illegible] | : 12.05 - 01.35 |

# நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேற்று பக்தி பரவசமான கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்,செப்.4

நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேற்று கார்த்திகைத் திருவிழா பக்தி பரவசமாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை உள்வீதியில் 200 இற்கு மேற்பட்ட விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. பக்தர்கள் மாவிளக்கு வைத்து நேர்த்திகளை பூர்த்தி செய்தனர்.

காலை 7 மணி முதல் 9 மணிவரை உள் வீதியின் எல்லா மூலைகளிலும் பல்துறை சார்ந்த் கலைஞர்கள் இணைந்து இசை அர்ச்சனை நிகழ்வை நடத்தினர். இந்த இசையர்ச்சனையை கேட்டு அடியார்கள் பக்திப் பரவசத்தில் திளைத்தனர்.

மாலையில் முக்கூட்டுச் சப்பரத்திற்கு முன்பாக தட்டுக்களில் கற்பூரம் கொழுந்து விட்டு எரிந்து மணம் வீச முருகப் பெருமான் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (அ-1)

# நல்லையில் நேற்றுத் திடீரென நடைபெற்ற தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,செப்.4

நல்லைக்கந்தன் ஆலய சித்திரத் தேர் நேற்று மாலை வெள்ளோட்டம் விடப்பட்டது.

கடந்த வருடம் அசாதாரண சூழ்நிலை காரணமாக தேர்த்திருவிழா நடைபெறவில்லை. தொடர்ந்து இருப்பிடத்திலேயே தேர் தரித்து நின்றது.

அதற்குப் பரிகாரமாகப் பிராயச்சித்தம் செய்யும் பொருட்டு நேற்று மாலை 5.30 மணியவில் தேர் ஆலய வீதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

மூலஸ்தானத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட இயந்திரப் பெட்டி தேரில் வைக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம்பெற்றது.

கார்த்திகைத் திருவிழா முடிவடைந்து முருகன் ஆலய இருப்பிடத்துக்கு திரும்பிய கையோடு, தேர் வெள்ளோட்டமாக இழுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அது கேட்டு ஆலயத்தில் கூடியிருந்த பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் நல்லூரான் தேரை ஆலய வீதியில் இழுத்துவந்தனர். (அ-1)

# பொலிஸாரின் சூட்டையும் மீறி தப்பிச் சென்ற வாகனங்கள்!

கொழும்பு,செப்.4

காலி மாவட்டம் மிட்டியாகொடைப் பகுதியிலுள்ள பொலிஸாரின் சோதனைச்சாவடி ஒன்றின் ஊடாக நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பொலிஸாரின் வழி மறிப்பையும் மீறிச் சென்றதாகக் கூறப்படும் இரு வாகனங்களை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

எனினும் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியிலும் அந்த இரு வாகனங்களும் தப்பிச் சென்றுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையைத் தாங்கள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# வவுனியா தம்பனையில் ஞாயிறன்று மோதல்!

வவுனியா, தம்பனைப் பகுதியில் உள்ள படையினரின் முகாம் மீது நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் மற்றும் சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று அரசுப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினரின் பதில் தாக்குதலில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் -

அந்தப் பகுதியில் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ரி - 56 ரகத் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் -

படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவிதத் தகவலும் வெளிவரவில்லை. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகள் போல படையினர் நடப்பதா?

## கண்டிக்கிறார் பிரதம நீதியரசர்

கொழும்பு,செப்.4

யுத்தப் பிரதேசத்துக்கு அப்பால் துப்பாக்கி தாங்கியிருக்கும் படையினரும், பொலிஸாரும் மக்களை இம்சைப்படுத்தி, கெடுபிடிகளுக்குள்ளாக்கும் வகையில் நடந்துகொண்டால் அவர்களும் பயங்கரவாதிகளாக நடந்து கொள்கின்றார்கள் என்றே அர்த்தம். இத்தகைய போக்குகளைப் படையினரும், பொலிஸாரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு நேற்று உயர்நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் போது பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் மணல் அகழ்வது, அகழ்ந்த மண்ணை எடுத்துச் செல்வது போன்ற விடயங்கள் தொடர்பான வழக்கு ஒன்றின்போதே பிரதம நீதியரசர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல இடங்களில் மக்களை சோதனை செய்யும் செயற்பாடுகள் அடிப்படை உரிமைகளை மீறும் வன்முறைகள் எனப் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

தாம் பயணம் செய்யும் வாகனம் கூட அடிக்கடி வழிமறிக்கப்பட்டு சோதனையிடப் படுகின்றது என்று குறிப்பிட்ட பிரதம நீதியரசர் மக்களை இம்சைப்படுத்தாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டார். (சி)

## சரணடைவோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளனர்.

இரு குடும்பங்களின் தலைவர்களும் மற்றும் ஐவரும் தொடர்ந்து ஆணைக்குழுவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

**இருவரைக் காணவில்லை**

அதேவேளை- மண்டைதீவைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த இவர்கள் பண்ணை ஊடாக மண்டைதீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவேளை காணாமல் போயுள்ளனர் என அவர்களது உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (அ-1)

# மக்களைப் பயங்கரவாதிகளிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**வடக்கைக் கைப்பற்றப் பெரும் படை நடவடிக்கை என்பதை என்பதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை**

வடக்கைப் பிடிக்க அரசுப் படைகள் பெரும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கப் போகின்றன என்ற கூற்றை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏனெனில், இந்த நாட்டில் புலிகளின் பிரதேசம், அரசின் பிரதேசம் என்று இரு வெவ்வேறு பிரதேசங்கள் இருக்கின்றன என அரசு கருதவில்லை. முழு நாடுமே அரசின் கீழ் வருவதுதான்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம், அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றெல்லாம் குறிப்பிடப்படுவதை இந்த அரசு ஏற்றுக் கொள்வில்லை. அதைக் கணக்கெடுக்கவும் இல்லை.

முழு நாடுமே அரசின் கீழ்த்தான் உள்ளது என்ற நிலையில் வடக்கை கைப்பற்ற பெரும் படை நடவடிக்கையை அரசுப் படைகள் புதிதாக ஆரம்பிக்கப்போகின்றன என்று அர்த்தப்படுத்துவதை - அல்லது கூறப்படுவதை - அரசு ஏற்றுக்கொள்ளவேயில்லை.

சில சமயம், ஏதேனும் பிரதேசத்தில் இருந்து கொண்டு பயங்கரவாதிகள் மோசமான பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடலாம். அதனை முறியடித்து, அப்பிரதேச மக்களைப் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கும் மனிதாபிமானப் பணியை அரசு தொடரும் அது அரசின் கடமையும் கூட.

**மக்களை மீட்கும் மனிதாபிமானப் பணி**

கிழக்கு மாகாணத்திலும் அதுதான் நடந்தது. மூதூர், மாவிலாறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதச் செயல்கள் முடியடிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்தே கிழக்கில் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கும் மனிதாபிமானப் பணியை அரசு பொறுப்போடு முன்னெடுத்தது.

அதுவே சிலாவத்துறையிலும் இடம்பெற்றது. அத்தகைய நடவடிக்கைகள் தொடரும். அது தொடர்பான தனது கடப்பாட்டை - பொறுப்பை - அரசு தொடரும்.

பயங்கவரவாதச் செயல்களைக் கைவிட்டு, அரசுடன் பேசுவதற்கு புலிகளின் தலைவர் இப்போது வருவாரானாலும், அடுத்த நிமிடம் பேச்சு நடத்த அரசு தயார். - என்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. (சி)

## இரவு வேளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமீபமாக சடலம் ஒன்று உள்ளது என தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது அது இதயராஜின் சடலம் என அடையாளம் கண்டோம்- என்று சாட்சியத்தில் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-203)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!

- ✓ Advanced Diploma in Information & Communication Technology
- ✓ Advanced Diploma in Computer Hardware Engineering
- ✓ Advanced Diploma in Computer Programming
- ✓ Diploma in Microsoft Office
- ✓ Diploma in Desktop Publishing
- ✓ Diploma in Computerized Accounting Packages

உங்கள் பதிவுகளை 12.09.2007 முன்னர் மேற்கொள்ளவும். 15.09.2007 வகுப்புக்கள் ஆரம்பம்!! எமது நிறுவனத்தால் வழங்கப்படும் சான்றிதழ்கள் யாவும் சர்வதேசதரம் வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களாகும்!!

மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 0777-110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)



வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே

ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடிக் கிளை

நடத்தும் மாபெரும் சிங்கிதி கிண்ண துடுப்பாட்ட/வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

வயதுப்பிரிவு :- 17வயதுக்குட்பட்ட மாணவர்கள் (31.12.2007 அன்று)

துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி (மென்பந்து)
5 பந்துப் பரிமாற்றம் - 6 வீரர்கள்

வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி
ஒரு பாடசாலையின் சார்பில் ஓர் அணி மட்டுமே பங்குபற்றலாம்.

போட்டிக்கான விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி 07.09.2007
அணி ஒழுங்கு தெரிவு 11.09.2007

"ஹற்றன் நஷனல் வங்கி உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி"

ஹற்றன் நஷனல் வங்கி,
இல.30, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
(64438) தொ.பே. 021 2264149, 0212264150



தொழிற் பயிற்சிகள்

MOBILE PHONE REPAIRING
Hardware — Hardware Repairing
Software — Software
Phone lock — Troble shooting

RADIO, TV AND VIDEO DECK REPAIRING
Amplifier — CD player — Satellite Antenna
Radio — videodeck — monitor
TV — UPS — video deck

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
Assemple of upgrade own computer
Trouble shoot & Repair — Net working of computer

REFRIGERTION AND AIRCONDITIONING
Retrigrator — spilt Ac — Package Ac
Deep freezer — window Ac

ELECTRICAL WIRING AND REWINDING
Single phase wiring — Fan, motor, Transformer
Three Phase wiring — Rewinding

பயிற்சிகள் ஆரம்பம்: 05.09.2007 (கிழமை நாட்கள்)
09.09.2007 (சனி, ஞாயிறு)

விபரங்களிற்கு
Jaffna Technical Institute
45 Clock tower Road, Jaffna
T.P 021 222 6434

கிளை
Dr. சிறிபத்மநாதன் கட்டிடம்
சிலையடி, புலோலி



NEW SCIENCE CENTER
(யாழ்நகர்)

PHYSICS
A/L Day Class
(Mon - Fri 8.00 - 9.30 am)
A/L 2008 புலங்கள் (Sat, Sun 8.00 - 9.30am)
A/L 2009 பொறிமியல் (Sat, Sun 9.30 - 11.00am)

அலகு ரீதியான தொடர் பரீட்சையும் அதற்கான விளக்கமும்
(வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்)
பரீட்சை - 01 (09.09.2007)
(sun) (11.30-1.30)

By : K.S[illegible]van
Proprietor :-N.Boobalasingam. (64488)



பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY: BRITTO
ஆரம்பம் 06.09.2007 காலை 10 மணி
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
BRAIN POWER INSTITUTE
Gurunagar Jaffna



SUBRA (14) சித்தன்கேணி

தரம்-5- புலமைப் பரிசில் வகுப்பு
கைலைநாதன்

| | |
|---|---|
| சிங்களம் | - லீலாகிருஷ்ணன் |
| தமிழ் | - பகீரதன் |
| கணிதம் | - பாலினி |
| சுற்றாடல் | - பத்மாவதி |
| ஆங்கிலம் | - மேரிதாஸ் |

★ வாரத்தில் 3 பயிற்சிப்பரீட்சைகள்
★ போயா தினங்களில் கருத்தரங்கு
★ கடந்த கால மாணவர்களின் பெறுபேறே எமது திறமை.

அனுமதிகள் - பெற்றோர் மூலமாக பெறப்பட வேண்டும்.
ஆரம்பம் 05.09.2007 புதன் மாலை 4.30

பிரத்தியேக தமிழ்
2008 A/L Paper class
குழந்தை வேல்
ஆரம்பம் 05.09.2007 புதன் மாலை 4.00
★அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.



ENGLISH
கொழும்புத்துறை புனித செபமாலை ஆலய வளாகம்
SPOKEN WITH GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம் 06.09.2007
(செவ்வாய்/வியாழன் வகுப்புகள்)
நேரம்:- மாலை 3மணி
இடம்:- புனித செபமாலை அன்னை ஆலய கல்வி மண்டபம், கொழும்புத்துறை.



சுடர் ஒளி THE SUDAR OLI
இன்று விற்பனையில்

ஓகஸ்ட் 26 - செப். 1

★ தெற்குத் தலைமைகள் தீர்வை முன்வைக்குமா? அல்லது யுத்தம் வெடிக்க உதவுமா?
★ இனிப் போர்ப் புயல்தான்!
★ அந்தரிக்கிறார்கள் யாழ். பொதுமக்கள்
★ தமிழ் - முஸ்லிம் தலைமைகளின் குடுமிச்சண்டை கிழக்கை விழுங்கத் தயாராகும் பேரினவாதம்
★ குங்குமப்பூ சாப்பிட்டால் குழந்தை சிவப்பாகப் பிறக்குமா?
★ தலை நிமிர்ந்து நிற்கும் அப்பலோ மருத்துவமனை
★ முற்போக்கு இலக்கியத்தின் முதல்வர் சில்லையூர் செல்வராசன்

மற்றும் பலவகைச் சுவையான அம்சங்கள்

உங்கள் உதயன் முகவரிடம் இன்றே கேட்டு வாங்குங்கள்
விமானக் கட்டண விலை ரூ. 40


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகம் காசுபதி

மட்டுவில் வடக்கு, பொற்கொல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும், தற்போது 36 5/7, சின்சபா வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் காசுபதி நேற்று (03.09.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நந்தகோபாலின் (உரிமையாளர்- ரூபி ஜூவல்லர்ஸ் - கன்னாதிட்டி- யாழ்ப்பாணம்) அன்புத் தாயாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*36 5/7, சின்சபா வீதி,*
*வெள்ளவத்தை.*
*தொ.பே: 0112 599567,*
*0777 344074*

தகவல்:
ப.வைரவநாதன்
(மருமகன்)

### பொன்னு அழகரத்தினம்



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு அழகரத்தினம் கொழும்பில் நேற்று (03.09.2007) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர்களான பொன்னு - இலக்ஷ்சுமி ஆகியோரின் அன்பு மகனும், அமரர்களான முத்துராஜா - மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மருமகனும், லெனின்ராஜா (Florida Property Developer's (Pvt) LTD), சத்தியராஜா (Swiss), காலஞ்சென்ற தனராஜ், மீனலோஜினி (ஆசிரியை U.N.H. International School, Wattala), நித்தியலோஜினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவாஜினி, றஜீனா, சசிகுமார் (பொறியியலாளர், A&E Lanka (PVT) LTD, Kaduwela) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிலி, டெனிஸ்மேனன், அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 20-9/1, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13 இல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (05.09.2007) புதன்கிழமை பி.ப 5 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 20-9/1, கொட்டாஞ்சேனை*
*கொழும்பு-13.*
*தொ.இல: 0777-387945*
*011-2384845*

தகவல்:
அ.லெனின்ராஜா

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org